<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | STC No. 788/2023 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | **P.W.1** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வெற்றிவேல் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 17.03.2025.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது கோட்டமங்கலம் கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்து வருகிறேன். இதற்கு முன நான் பெரிய கோட்டை கிராம நிர்வாக அலுவலரகா பணியில் இருந்து கூடுதல் பொறுப்பாக சின்ன வீரன்பட்டி கிராம நிர்வாக அலுவலராக இருந்த போது கடந்த 2019 ம் வருடம் பாராளுமனற் தேர்தல் நடைபெற்று கொண்டிருந்த போது 22.03.2019 ம் தேதி ரோந்து அலுவலில் இருந்து போது தாராபுரம் ரோடு சித்தக்குட்டை சண்முக பிரியா மில் முன் மாலை 7.00 மணியளவில் கண்காணித்த போது காங்கிரஸ் கட்சியின் கொடி கம்பம் சண்முகப்பிரியா மில் முன்பாக தேர்தல் விதிமுறைகளுக்கு மாறாக வாழ்ந்து கொண்டிருந்தது. அந்த கம்பமானது சித்தக்கட்டையில் இருந்து கட்சியினரால் அகற்றப்படாமல் இருந்ததால் அவர்கள் மீது உடுமலை காவல் நிலையத்தில் அன்றைய தினம் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அந்த புகார் அசா.ஆ.1 என குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். போடிப்பட்டியை சேர்ந்த ஜெயபிரகாஷ் என்பவர் தான் பொறுப்பாளர் என்பதை போலீசார் விசாரணை தெரிந்து கொண்டேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எனது புகாரில் குறிப்பிட்டுள்ள காங்கிரஸ் பொறுப்பாளர் யார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்கண்ட காங்கிரஸ் பொறுப்பாளரை புகார் அளித்த தேதியிலிருந்து இன்று வரை நான் பார்த்தது இல்லை என்றால் சரி. புகாரில் கண்ட கம்பத்தை நீக்காமல் இருப்பது காங்கிரஸ் பொறுப்பாளரின் பொறுப்பு தான் என்றால் சரிதான். எனது புகாரிலோ அல்லது என்னை காவல்துறையினர் விசாரிக்கும் போது எதிரி தான் மேற்கண்ட குற்றத்தை செய்தார் என்று நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். காவல்துறையினர் மேற்கண்ட பிரச்சினைக்குரிய கொடிக்கம்பத்தை கைப்பற்றிய விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான் .

2. நான் சம்பவத்திற்கு எத்தனை நாட்களுக்கு முன்னர் இருந்து கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன் என்றால் சம்பவத்திற்கு மூன்று வருடங்கள் முன்பு இருந்து கிராம நிர்வாக அலுவலராக சின்ன வீரம்பட்டியில் பணிபுரிந்து வருகிறேன். நான் புகார் அளித்த தேதிக்கு பின்னிட்டு இன்றுவரை பிரச்சனைக்குரிய கொடிக்கம்பம் இருந்த இடத்திற்கு செல்லவில்லை என்றால் சரிதான். பிரச்சனைக்குரிய கொடிக்கம்பம் என்ன நிறம் மற்றும் என்ன உயரம் உடையது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, 20 அடி உயரம் உள்ள கொடிக்கம்பம் ஆகும் மேலும் காங்கிரஸ் கொடி வண்ணம் உள்ள கொடிக்கம்பம் ஆகும்.

3. பிரச்சனைக்குரிய கொடிக்கம்பத்திற்கு அருகில் வேறு கட்சிகளை சார்ந்த கொடிக்கம்பங்கள் இல்லை என்றால் சரிதான். நான் கொடிக்கம்பத்தை பார்த்த நேரத்தில் மற்ற யாரையும் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல அருகில் இருந்த நபர்களை விசாரித்தேன், மேற்கண்ட கொடிக்கம்பம் காங்கிரஸ் பொறுப்பாளர் உடையது என்று சொன்னதன் பெயர்தான் புகார் அளித்தேன். நான் மேற்கண்டவாறு யாரை எவ்வாறு எப்போது விசாரித்தேன் என்ற விவரத்தை போலிசார் விசாரணையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான் .

4. நான் கிராம நிர்வாக அலுவலராக உள்ளதன் காரணமாக யாரை எப்பொழுது விசாரித்தேன் என்ற விவரத்தை காவல்துறையினிடம் அளித்திருக்க வேண்டும் என்றால் சரியல்ல . மேற்கண்ட காங்கிரஸ் கட்சியின் பொறுப்பாளரை தவிர்த்து மற்ற கட்சிகளின் பொறுப்பாளர்களுக்கு குற்றத்தை சம்பந்தமில்லை என்றால் சரிதான் . எதிரி கம்யூனிஸ்ட் கட்சியை சார்ந்தவர் என்றாலும் நான் அரசியல் தூண்டுதலின் பேரில் எதிரிக்கு எதிராக பொய்யாக புகார் அளித்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கறிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல .

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.